DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 19/2020**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுப்ரமணி | Caste | : | |
| Father Name | : | ஆறுமுகம் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **09.01.2026.**

**PW - 14**

**(1** முதல் **6** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், துறையூர் தாலுக்கா, எரகுடி கிராமத்தில் குடியிருக்கிறேன். மரம் அறுக்கும் வேலை செய்கிறேன். அசா.11 மாரிமுத்துவை எனக்கு தெரியாது. சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு நான் உப்பிலியபுரம் காவல்நிலையத்திற்கு வேறொரு வழக்கு சம்பந்தமாக சென்றிருந்தபோது போலிசார் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். இரண்டு கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் இரண்டு பார்வை மகசர்கள் மற்றும் கைப்பற்றுதல் மகசர் ஆகியவற்றில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பங்கள் மட்டும் முறையே அதசாஆ.5 முதல் அதசாஆ.7 வரை ஆகும். போலிசார் என்னை வழக்கு பற்றி விசாரிக்கவில்லை.

*(சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது, ஆவணங்களை பரிசீலித்து அனுமதி வழங்கப்பட்டது)*

<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அதில் கடந்த 25.05.2019 அன்று மதியம் 02.00 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது கார்த்திக் இறந்தவிபரம் கேள்விபட்டு வீரப்பன் என்பவரது வாழைத்தோட்டத்தில் உள்ள சமாதி அருகே கார்த்திக் பிரேதம் கிடந்த இடத்திற்கு நானும், மாரிமுத்துவும் சென்று பார்த்தோம் என்றும், அப்போது மாலை 03.00 மணிக்கு துறையூர் ஆய்வாளர் இந்த வழக்கு விசாரணைக்காக எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு வரைபடங்கள் மற்றும் பார்வை மகசர்கள் தயாரித்தார் என்றும், அந்த மகசர்களில்தான் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பமிட்டோம் என்றும், மேலும் பிரேதம் கிடந்த இடத்தில் கார்த்திக்கின் ஒரு ஜோடி செருப்பு மற்றும் துண்டு ஆகியவற்றை ஆய்வாளர் எங்கள் இருவரின் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினார் என்றும், மேலும் காலையில் விபத்து நடந்த இடத்தையும் எங்கள் முன்பாக பார்வையிட்டு மகசர் தயாரித்தார் என்றும், இந்த நிகழ்வு அன்று மாலை 03.00 மணி முதல் 06.30 மணிவரை நடந்தது என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.